**OS.No.116/2022 P.W.1-கலைவாணி 15.09.2025**

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்பந்தமான எல்லா ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்ய வேறு ஆவணங்கள் இல்லை. என் வழக்குப்படி 03.03.2018 அன்று ரூபாய் 5 லட்சமும், 29.10.2018 அன்று ரூ.3,50,000/-மும், 18.06.2019 அன்று ரூபாய் 10 லட்சமும் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதலாவதாக ரூபாய் 5 லட்சம் கொடுத்ததற்கும், அதன் பிறகு ரூபாய் 10 லட்சமும் கொடுத்ததற்கு இடையில் 16 மாதங்கள் இடைவெளி இருந்தது என்றால் சரிதான். அவ்வாறு இடைப்பட்ட காலத்தில் எனக்கு எந்த வட்டியும் கொடுக்கவில்லை. முதலில் வாங்கிய தொகைகளுக்கே வட்டி செலுத்தாத நிலையில் 3வது தவணையாக நான் பணம் கடன் கொடுத்ததாக கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. 3 தொகைகளுக்கும் தனித்தனியாக பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார். கடனுறுதி சீட்டில் காட்டப்பட்டுள்ள தொகைகள் தனித்தனி கடனுக்காக காட்டப்பட்டுள்ள தொகைகள் தான். நான் அந்த கடன் விவரங்களை காட்டும் வகையில் கணக்கு பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்காவணங்களின் படி 25.02.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.03.2018 அன்று கொடுத்ததாக கூறப்படும் கடனும், அதனை தொடர்ந்து 29.10.2018 அன்று கொடுத்ததாக கூறப்படும் கடனும், காலவறையரை சட்டதால் பாதிக்கப்பட்டு காலாவதியானது என்றால் சரியல்ல. 3 கடன்களுக்கும் நான் தனித்தனியாக வழக்கறிஞர் அனுப்பினேனா அல்லது ஒரே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் தனித்தனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 கடைசி தொகையான ரூபாய் 10 லட்சத்திற்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். ஆனால் என் வழக்கறிஞரிடம் 3 அறிவிப்பு அனுப்ப சொன்னேன். அவர் என்ன செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் 3 அறிவிப்புகளையும் கொடுத்தேன். மற்ற 2 அறிவிப்புகளை இந்த நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. மற்ற 2 அறிவிப்புகளை தாக்கல் செய்தால் என் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 3 தொகைகளயும் எப்படி ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்று என் வழக்கில் சொல்லவில்லை என்றால் என் இடத்தை விற்று கொடுத்தேன். அதனை ஏன் என் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் கேட்கவேண்டும். எனக்கு ஆங்கிலம்

தெரியாது. தமிழ் படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் விசாரணை சாட்சியத்தில் சொத்தை விற்று பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை வரைவோலையாகவோ, காசோலையாகவோ, பணமாகவோ கொடுத்தேனா என்று குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் பணமாக தான் கொடுத்தேன். பணத்தை எப்படி கொடுத்தேன் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வழக்குரையில் நான் எவ்வளவு தொகையை எந்த இடத்தை விற்று பணம் பெற்றேன் என்று குறிப்பிடவில்லை. 2017ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் குடும்ப சொத்தில் எனக்குள்ள பங்கை விற்று ரூபாய் 25 லட்சம் கிரயம் மூலம் பெற்றேன். அந்த கிரய ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய முடியும். நான் கொடுத்த புகாரின் பேரில் 15.02.2021 அன்று மாவட்ட குற்றப்பிரிவில் பிரதிவாதி மீது புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த அசல் முதல் தகவல் அறிக்கை என்னிடம் இல்லை. புகாரின் நகல் என்னிடம் இல்லை. மேற்படி புகாரில் என் தாயாருக்கு சொந்தமான 22 சென்ட் நிலத்தை 2014ம் ஆண்டு விற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2017ம் ஆண்டு நான் நிலத்தை விற்றதாக கூறுவது பொய் என்றால் 2014-லும், 2017-லும் விற்றோம். 2014ம் ஆண்டு விற்ற சொத்துக்கள் குறித்த கிரய பத்திரத்தை என்னால் தாக்கல் செய்யமுடியும். அந்த புகார் படி பார்த்தாலும் 2014ம் ஆண்டிற்கு பிறகு நான் பிரதிவாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் 2014 மற்றும் 2018ம் ஆண்டுகளில் நான் கடன் கொடுத்தேன். 2016க்கு பிறகு நான் எந்த தொகையும் கொடுத்ததாக போலீஸ் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலீஸ் புகார் எவ்வளவு தொகைக்கு கொடுத்தேன் என்றால் ரூ.19,92,578/-க்கு கொடுத்தேன். போலீஸ் புகாரில் 2014, 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்த விவரத்தை மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீஸ் புகாரில் எந்த இடத்திலும் 2018 மற்றும் 2019ல் கடன் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் அது வேறு கடன் தொகை என்பதால் புகாரில் சொல்லவில்லை. உண்மையில் 2018, 2019ம் ஆண்டுகளில் பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்திருந்தால் மேற்படி காவல் துறை புகாரில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. போலீஸ் புகாரில் சொல்லப்பட்டுள்ள தொகையை பிரதிவாதி எனக்கு இன்றைய தேதி வரை கொடுக்கவில்லை.

ரூ.19,92,578/- என்பது எனக்கு பெரிய தொகை தான் என்றால் சரிதான். இவ்வளவு பெரிய தொகையை 2014, 2015ம் ஆண்டுகளில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு 2014, 2015ம் ஆண்டுகளில் ஒரு சொற்ப தொகையை கடனாக கொடுத்துவிட்டு அதற்காக கடனுறுதி சீட்டுகளை எழுதி வாங்கினேன் என்றும், அதனை நிரப்பி தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2014, 2015ம் ஆண்டுகளில் கடன் கொடுத்துள்ள பட்சத்தில் அது காலாவதியாகிவிடும் என்று அதனை மறைத்து 2018, 2019ம் ஆண்டுகளில் கடன் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் துறையில் கொடுத்த புகாரை உயர்நீதிமன்றம் ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், உயர்நீதிமன்றத்தில் வெங்கடேசன் என்ற வழக்கறிஞரை அமர்த்தி நான் வழக்கு நடத்தினேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 3 கடனுறுதி சீட்டுகளையும் ரமேஷ்பாபு என்பவர் பூர்த்தி செய்துள்ளார். மேற்படி 3 கடனுறுதி சீட்டுகளை எந்த இடத்தில் வைத்து மேற்படி ரமேஷ்பாபு பூர்த்தி செய்தார் என்றால் ரமேஷ்பாபுவின் ஜெராக்ஸ் கடையில் வைத்து பிரதிவாதியை வைத்து கொண்டு பூர்த்தி செய்தார். ரமேஷ்பாபுவின் ஜெராக்ஸ் கடை என் வீடு அமைந்துள்ள பஜார் தெருவில் உள்ளது. ரமேஷ்பாபு என்னுடைய உறவினர் இல்லை. ரமேஷ்பாபு கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்யும் போது யார், யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதி, அவரது கணவர், அவரது மகனும், ரமேஷ்பாபுவும், நானும், என் தாயாரும் இருந்தோம். இவர்களை தவிர வேறு யாரும் இல்லை. என் தாயார் பெயர் உஷாராணி. என் தாயார் உஷாராணி மேற்படி கடனுறுதி சீட்டுகளில் சாட்சியாக கையொப்பம் இடவில்லை. பிரதிவாதி தரப்பிலும் யாரும் சாட்சியாக கையொப்பம் இடவில்லை. சாட்சிகளிடம் பிற்பாடு ஒரு தேதியில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் மேற்படி 3 கடனுறுதி சீட்டுக்களை முன்னிலை படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த கடன் வேறு வழக்கு கடன் வேறு என்பதால் தாக்கல் செய்யவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது ஏற்கனவே வாங்கிய கடனுறுதி சீட்டுக்களை நான் பூர்த்தி செய்யாமல் வைத்திருந்தேன் என்றும், காவல் நிலைய புகாருக்கு பிறகு அதனை பூர்த்தி செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் ரூபாய் 18 லட்சம்

கொடுத்துவிட்டு ஏன் ரூபாய் 10 லட்சத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் நான் எல்லா கடனுறுதி சீட்டுக்களையும் கொடுத்து என் வழக்கறிஞரிடம் அறிவிப்பு அனுப்ப சொன்னேன். அதில் என்ன தவறு நடந்துள்ளது என்று எனக்கு தெரியாது. 3 கடனுறுதி சீட்டுகளும் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று குறிப்பாக வாசகம் இல்லை என்றால் ஜெராக்ஸ் கடையில் வைத்து எழுதப்பட்டது. தற்போது சாட்சியிடம் கடனுறுதி சீட்டை காட்டி ஜெராக்ஸ் கடையில் வைத்து எழுதப்பட்டதாக குறிப்பாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை என்று சாட்சி கூறுகிறார். சுகுமார் தேவி ஆகியோரை குறித்து என் வழக்குரையில் சொல்லவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் ரூபாய் 10 லட்சத்தை பிரதிவாதிக்கு எந்த வகையில் கொடுத்தேன், எவ்வாறு ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 2014, 2017ம் ஆண்டுகளில் சொத்தை விற்று எனக்கு கிடைக்க பெற்ற தொகை பெரிய தொகையாக இருக்குமா என்றால் ஆமாம் அது பெரிய தொகை தான். சொத்து விற்ற பணத்தை வங்கியில் போட்டு வைத்திருந்தேனா அல்லது வீட்டில் ரொக்கமாக வைத்திருந்தேனா என்றால் கையில் ரொக்கமாக தான் வைத்திருந்தேன். என் தாயார் இடத்தை விற்று எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் 2015 மற்றும் 2017ம் ஆண்டுகளில் அவ்வாறு பணம் கொடுத்தார். சொத்தை விற்ற தேதியில் இருந்து பிரதிவாதிக்கு பணம் கொடுத்த தேதி வரையிலுள்ள இடைப்பட்ட நாட்களில் பணத்தை ரொக்கமாக வைத்திருந்தேனா அல்லது வங்கியில் போட்டு வைத்திருந்தேனா என்றால் ரொக்கமாக வைத்திருந்தேன். என் தாயார் சொத்தை விற்று பணம் கொடுத்த மறுநாளே பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். ரூ.18,50,000/-யை ஒரே தொகையாக கொடுத்தேனா என்றால் இல்லை. ஒவ்வொரு முறையும் என் தாயார் பிரதிவாதிக்கு பணம் கொடுப்பதற்கு ஒரு நாள் முன்னர் கிரய தொகையை கொடுத்தாரா என்றால் இல்லை. என் முதல் விசாரணை சாட்சியத்திலும், வழக்குரையிலும் என் தாயார் சொத்தை விற்று கொடுத்த பணத்தில் தான் 2014, 2015, 2016, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றும், மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)